அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை : 02/2021(VI)

எனது இலக்கம் : EST-6/03/LEA/3381
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2021.12.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்கள்
பிரதேச செயலாளர்கள்
அரச கூட்டுத்தாபனங்களின், நியதிச் சட்ட நிறுவனங்களின் பிரதானிகள்

**<u>அரசாங்க சேவையை வழமைபோன்று கொண்டு நடாத்துதல்</u>**

மேற்படி விடயம் தொடர்பான 2021.10.01 ஆம் திகதிய 02/2021(V) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை தொடர்பில் உமது அவதானத்தை ஈர்க்க விரும்புகிறேன்.

02. 2022 ஆண்டுக்காக பெருந் தொகையான பணம் விவசாய, கைத்தொழில், வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்தி போன்ற அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை சிறப்பாக முகாமை செய்து துரித அபிவிருத்தியை அடைவதற்கு அரசாங்க ஊழியர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும். அதனைக் கவனத்தில் எடுத்து, கொவிட் - 19 வைரஸ் பரவலைத் தடுப்பதற்குச் செய்ய வேண்டிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய ஏற்பாடுகளில் மாற்றங்கள் எதுவும் இல்லாத நிலையில் மேற்படி சுற்றறிக்கையின் 02, 03, 04, 05, 06, 08 மற்றும் 14 ஆம் பந்திகளின் ஏற்பாடுகளை 2022.01.03 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இடைநிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கிணங்க, அரச உத்தியோகத்தர்களை 2022.01.03 ஆந் திகதி முதல் வழமை போன்று சேவைக்கு அழைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு